DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
STC. No.1037/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நமிதா | த-பெ | ஆதி நாயகன் |
| ஊர்: | : | கொத்தரி | | |
| வயது: | : | 31/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம். | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2026

**எதிரி ஆஜர்.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கொத்தரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது மாமனார் கிருஷ்ணன் என்பவருக்கும் ஆஜர் எதிரி குடும்பத்தாருக்கும் வீடு பிரச்சனை தொடர்பாக முன் விரோதம் இருந்து வந்தது. 17.08.2022 அன்று மாலை 6.45 மணியளவில் நான் எனது கணவரும் எங்களது வீட்டிற்கு முன்பு நின்று பேசிக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி மற்றும் அவரது கணவர் அங்கு வந்தார்கள் முன் விரோதத்தை மனதில் வைத்து கொண்டு ஆஜர்எதிரியானவர் என்னை பார்த்து தேவிடியா என்றும், எனது மாமனார் எங்கு என்றும் திட்டினார் அருகில் இருந்த எனது கணவர் ஆஜர் எதிரியிடம் கேட்ட போது அவரையும் தேவிடியா பயலே என்று கீழ் நோக்கிய திட்டினார். ஆஜர் எதிரி என்னை பேசிக்கொண்டே கீழே தள்ளிவிட்டார். இதனால் எனக்கு வலது பக்க நெஞ்சு பகுதியில் ஊமை காயமும், வலது கையில் வீக்க காயமும் ஏற்பட்டது. அருகில் இருந்த பாண்டி செல்வமும் அவரது மனைவியும் அண்ணபூரணியும் அங்கு வந்து தடுத்து விலக்கி வைத்தார்கள். மேலும் ஆஜர் எதிரியானவர் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி விட்டு அங்கியிருந்து சென்று விட்டார். பின்னர் எனது மாமியார் என்னை சிகிச்சைக்காக காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். அங்கு மருத்துவர்கள் பரிந்துரையின் அடிப்படையில் 108 ஆம்பிலன்ஸில் சூரக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தேன். மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் நான் நடந்த விவரங்களை சொல்லி ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு நான் புகார் அளித்தேன்.

**குறுக்கு விசாரணை**

எதிரி எனக்கு என்ன உறவு என்றால் எனது சின்ன மாமியார். இடம் சம்மந்தமாக என்னிடம்

தகறாறு செய்த போது எதிரியும் அவரது கணவரும் வந்தார்கள் என்றால் சரிதான். புகார் நான் சம்பவம் நடந்த மறு நாள் தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் உடனடியாக காவல் துறைக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தோம் பின்னர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்தேன். அப்போது போலீசார் அங்கு வந்து என்னிடம் புகார் பெற்று கொண்டார்கள். எதிரியின் கணவர் மீது ஏன் புகார் அளிக்க வில்லை என்றால் எதிரி மட்டும் தான் என்னை தாக்கினார். கானாடுகாத்தான் மருத்துவனை எனக்கு பக்கமா அல்லது காரைக்குடி அரசு மருத்துவமனை எனக்கு பக்கமா என்றால் நான் முதலில் பள்ளத்தூரில் உள்ள அரசு பெண்கள் மருத்துவமனைக்கு முதலில் சென்றேன் அப்போது எனக்கு மிகவும் உடல் நிலைய மோசமானதால் காரைக்குடி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. எனது மாமனாருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 8 பேர். அதில் எதிரியின் கணவரும் ஒருத்தர். எனது மாமனார் கட்டிய வீட்டில் எதிரியின் கணவருக்கு பங்கு உள்ளதா என்றால் சரியல்ல எனது மாமனார் எந்த வீடும் கட்டவில்லை. எனது மாமனார் இடத்தில் நாங்கள் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரிதான். மீதம் இடம் உள்ளது அது யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. எனது மாமனார் கொடுத்த இடத்தில் தான் நாங்கள் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரிதான். எனது மாமனாருக்கும், எதியின் கணவருக்கும் காரைக்குடி உரிமையில் நீதிமன்றத்தில் OS.682/2022 என்ற வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். எனது மாமனாரும், எதிரிகளும் சட்டப்படி எந்த வித பாகப்பிரிவினையும் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தாவா இடத்தில் எதிரியின் கணவருக்குரிய பங்கு இடம் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எதிரியை நாங்கள் அடித்து பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று எதிரிக்கும் காயம்பட்டு கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனாரின் தூண்டுதலின் பெயரில் தான் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. தன்னிச்சையாக எனக்கு ஏற்பட்ட காயத்தை சாதகமாக பயன்படுத்தி அவர் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.25 17:15:55 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE 1037/2022 P.W.1
## STC. No.1037/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாண்டி செல்வம் | த-பெ | ஆறுமுகம் |
| ஊர்: | : | கொத்தரி | | |
| வயது: | : | 43/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | எலக்ட்ரீசியன் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.03.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கொத்தரியில் வசித்து எலக்ட்ரீசியனாக பணி செய்து வருகிறேன். ஆஜர்எதிரி மற்றும் அ.சா.1 ஐ தெரியும். 17.08.2022 அன்று மாலை 6.45 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். அப்போது நான் வெளியே கிளம்பி வந்து கொண்டிருந்த போது வெளியே ஒரே சத்தமாக இருந்தது. அ.சா.1க்கும் ஆஜர் எதிரிக்கும் சண்டையாக இருந்தது. ஆஜர் எதிரியானவர் சம்பவ சமயத்தில் அ.சா.1 ஐ பார்த்து தேவிடியா என்றும் கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி கொண்டே கைகலப்பு ஏற்பட்டது. இதில் எனது தம்பி மனைவி அ.சா.1 ஐ ஆஜர் எதிரியானவர் மார்பில் கை வைத்து கீழே பிடித்து தள்ளி விட்டார் அதனால் அவர் மயக்கமுற்று கீழே விழுந்து விட்டார். பின்னர் அவரை முதல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றார்கள். பின்னர் எனக்கு வேலை இருந்த காரணத்தால் அங்கியிருந்து கிளம்பி விட்டேன். போலீசார் என்னை சம்பவ சமயத்தில் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிக்கும் கிருஷ்ணன் என்பவருக்கும் சிவில் வழக்கு நடைபெறுகிறது உண்மை தானா என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் எனது மனைவியும் இருந்தோம் சம்பவத்தை விலக்கி வைக்க முயற்சி செய்தோம். புகார்தாரர் எனது தம்பி மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக சம்பவத்தை நேரில் பாத்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

போலீசார் என்னை எங்கு வைத்து விசாரணைசெய்தார்கள் என்றால் சம்பவம் நடந்த 2 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். எனது மனைவியை விசாரணை செய்யவில்லை. எங்களுக்கும் எதிரிக்கும் நடக்கும் சிவில் வழக்கு கருத்தில் கொண்டு நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிரியின் மீது பொய் புகார் அளித்து வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது மனைவியை விசாரணை செய்தால் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.25 17:16:01 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**STC. No.1037/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரமேஷ் குமார் | த-பெ | ஆறுமுகம் |
| ஊர்: | : | பள்ளத்துார் | | |
| வயது: | : | 48/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர். | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.03.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் பள்ளத்துாரில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இவ்வழகு சம்பவம் நடந்த வீட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்த போது மதியம் நேரத்தில் பள்ளத்துார் போலீசார் சம்பவயிடம் வந்து அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையே நடைபெற்ற குடும்ப பிரச்சனை தொடர்பாக விசாரணை செய்து சம்பவயிடத்தை பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம்செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2**.

**குறுக்கு விசாரணை**

அ.சா.2 சாட்சி பாண்டி செல்வம் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் இல்லை எனது உறவினர். சம்பவயிடத்தில் போலீசார் விசாரணை செய்த போது எனது உடன் இருந்தவர் யார் என்றால் நினைவில்லை. போலீசார் கையொப்பம் பெற்ற ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் சொத்து சம்மந்தமாக ஏற்பட்ட சண்டை தொடர்பாக எழுதியிருந்தது. நான் அதே பகுதியை சேர்ந்தவர் என்பதால், அ.சா.1 க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.25 17:16:06 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.